முகாம் அலுவலர், 52, பெஸ்கி மேல்நிலைப் பள்ளி, உளுந்தூர்பேட்டை
மற்றும் விழுப்புரம், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : வ.மல்லிகா, எம்.எஸ்சி.,எம்.எட்.,எம்,பில்.

ந.க.எண் : 1502/ ஆ4/2013 நாள் : 08.04.2013.

பொருள் : இடைநிலை பொதுத் தேர்வு , – ஏப்ரல் 2013 இடைநிலைப் பள்ளி பொதுத் தேர்வு – 52, பெஸ்கி மேல்நிலைப் பள்ளி, உளுந்தூர்பேட்டை – மைய மதிப்பீட்டு முகாம் பணி – ஆசிரியர்கள் / பணியாளர்கள் நியமனம் செய்து ஆணையிடுதல் –சார்பு.

பார்வை: சென்னை–6, அரசு தேர்வுகள் இயக்குநர் செயல்முறைகள் ந.க. எண் 65201/பி3/2012 நாள் 26–03–2013.

*****

பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதத்திற்கிணங்க ஏப்ரல்–2013 இடைநிலைப் பொதுத் தேர்வு மைய மதிப்பீட்டு முகாம் பணி உளுந்தூர்பேட்டை, 52, பெஸ்கி மேல்நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ளது.உதவித் தேர்வாளர் மைய மதிப்பீட்டுப் பணி 16–04–2013 முதல் நடைபெறவுள்ளது. மேற்கண்டுள்ள முகாமிற்கு கீழ்க்கண்டுள்ளவாறுபட்டதாரி ஆசிரியர் பணியில் சேர்ந்த நாளை கணக்கில் கொண்டு உதவித்தேர்வாளராக நியமனம் அளித்து ஆணையிடப்படுகிறது.

கீழ்க்கண்ட தேதி வரை பட்டதாரி ஆசிரியராக பணியில் சேர்ந்தவர்களை மைய மதிப்பீட்டுப் பணிக்கு பணியேற்கும் வகையில் விடுவிக்குமாறு அனைத்து மேல்நிலை / உயர்நிலை பள்ளித்தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | பாடம் | பட்டதாரி ஆசிரியராக பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | தமிழ் | 31.12.2011 வரை |
| 2 | ஆங்கிலம் | 31.12.2011 வரை |
| 3 | கணிதம் | 31.12.2007 வரை |
| 4 | அறிவியல் | 31.12.2007 வரை |
| 5 | சமூக அறிவியல் | 31.12.2011 வரை |

1. மேற்கண்டுள்ள நியமனம் முற்றிலும் மந்தனமாக கருதப்பட வேண்டும்.
2. அளிக்கப்பட்டுள்ள நியமனங்கள் எக்காரணம் கொண்டும் ரத்து செய்ய இயலாது.
3. நியமனம் அளிக்கப்பட்டுள்ள தலைமை ஆசிரியர்/ஆசிரியர்கள் மேற்குறிப்பிட்டுள்ள தேதியில் காலை 8.30 மணிக்கு பணி ஏற்க ஏதுவாக சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்/முதல்வர்கள் பணி விடுப்பு செய்யப்பட வேண்டும்.
4. பணிவிடுப்பு செய்யப்பட்ட ஆசிரியர் முகாம் அலுவலரால் அளிக்கப்படும் வருகைச் சான்று அல்லது பணி விடுப்பு சான்றின் அடிப்படையிலேயே மீள பணியில் சேர அனுமதிக்க வேண்டும்.
5. முகாம் பணி நியமனங்கள் சம்பந்தப்பட்ட பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட EBS படிவங்களின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.
6. தலைமை ஆசிரியர் சம்மந்தப்பட்ட ஆசிரியரின் பணி விடுப்பு ஆணையுடன் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்றினையும் வழங்க வேண்டும்.
7. முகாம் பணி நியமனங்கள் அளிக்கப்பட்டுள்ள முதன்மை கண்காணிப்பாளர், கூர்ந்தாய்வு அலுவலர், உதவி தேர்வாளர்கள் கண்டிப்பாக பணி ஏற்க வேண்டும் என்றும், பணி ஏற்காத பணியாளர்கள் மட்டுமின்றி, பணிக்கு விடுவிக்காத தலைமை ஆசிரியர்கள்/முதல்வர்கள் மீதும் துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைக்கு பரிந்துரைக்கப்படும் என்றும் அறிவிக்கலாகிறது.

முகாம் அலுவலர்,
52, பெஸ்கி மேல்நிலைப் பள்ளி,
உளுந்தூர்பேட்டைமற்றும்
மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்,
விழுப்புரம்.

பெறுநர்:
சம்பந்தப்பட்ட ஆசிரியர்/பணியாளர்
(தலைமை ஆசிரியர் மூலமாக)

<u>முகாம் பணிக்கு விடுவிக்கப்படும் ஆசிரியருக்கு வழங்கப்பட வேண்டிய சான்று</u>

1. அடிப்படை ஊதியம் ரூ. தர ஊதியம் ரூ.

2. மதிப்பீட்டு பணிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள திரு. ______________________________

ஆசிரியர் 10 ஆம் வகுப்பிற்கு ______________ பாடம் மற்றும் .................................. பாடம் பயிற்றுவித்து வருகிறார்.

3. 1, இடைநிலை ஆசிரியர் பணியில் சேர்ந்த நாள்......................................................

2. பட்டதாரி ஆசிரியராக பணியில் சேர்ந்த நாள்......................................................

3. பட்டதாரி ஆசிரியர் பதவியில் பணிவரன்முறை செய்த நாள்.........................................

4. மார்ச்—2013 எஸ்.எஸ்.எல்.சி., பொதுத் தேர்வில் சம்பந்தப்பட்ட ஆசிரியரின் மகனோ/மகளோ பங்கேற்ககவில்லை என சான்றளிக்கிறேன்.

5. மேற்கண்டுள்ள ஆசிரியர் மீது சென்னை, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களால் தேர்வு பணி செய்வதிலிருந்து தடை ஏதும் விதிக்கப்படவில்லை என சான்றளிக்கிறேன்.

ஆசிரியர் கையொப்பம். தலைமை ஆசிரியர் கையொப்பம்.

# விழுப்புரம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் : 1459/அ3/2013, நாள் : 10.04.2013.

பொருள் : தேர்வுகள் – இடைநிலை பொதுத் தேர்வுகள் – மார்ச் / ஏப்ரல் 2013 தேர்வுகள் முடிவுற்று – ஒப்படைக்க வேண்டிய சில ஆவணங்கள் சார்பான விவரம்

பார்வை : 1. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண். 140213/ பி5/2012, நாள். 13.02.2013.
2. கடலூர்–1, அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநரின் கடிதம் ந.க.எண் 9087/ ஆ2/ 2012. நாள்.13.02.2013.

*****

- மார்ச் / ஏப்ரல் 2013 இடைநிலைப் பொதுத் தேர்வு கடந்த 27.03.2013 முதல் 12.04.2013 வரை நடைபெறுகிறது. தேர்வுகள் முடிவுற்ற பின் கீழ்க்கண்ட ஆவணங்களை தவறாமல் கடலூர், **அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர்** அவர்களுக்கு தனி நபர் மூலம் 15.04.2013 திங்கள்கிழமை காலை தவறாமல் ஒப்படைக்குமாறு அனைத்து இடைநிலை பொதுத் தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் / துறை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- **ஒப்படைக்க வேண்டிய ஆவணங்கள்**:

1. **Nominal roll** – மாணவர்கள் வருகை (**Present, Absent**) குறிப்பிட்டு, புத்தக வடிவில் தைத்து அனுப்புதல் வேண்டும்.
2. Attendance list மாணவர்களின் புகைப்படத்துடன் கூடிய வருகையினை (**Present, Absent**) குறிப்பிட்டு, புத்தக வடிவில் தைத்து அனுப்புதல் வேண்டும்.
3. “L” – Form - 7 நாட்கள் நடைபெற்று, முகாம் அலுவலருக்கு அனுப்பப்பட்ட தேர்வின் விவரத்தினை (27.03.2013 முதல் 12.04.213 வரை நடைபெற்ற) ஒட்டு மொத்தமாக தைத்து அனுப்புதல் வேண்டும்.
4. அஞ்சல் வில்லைக் கணக்குகள் செலவின விவரம்.

- மேற்கண்ட ஆவணங்களை ஒப்படைத்த விவரத்தினை 15.04.2013 அன்று மாலைக்குள் மாவட்டக் கல்வி அலுவலருக்கு தெரிவிக்க அனைத்து முதன்மைக் கண்காணிப்பாளர்கள் / துறை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
- 2013 இடைநிலை பொதுத் தேர்வுப் பணியில் ஈடுபட்ட பணியாளர்களுக்கு தலத்திலேயே **மதிப்பூதியம், உழைப்பூதியம்** வழங்கும் பொருட்டு உரிய தொகை வினாத்தாள் கட்டுக் காப்பாளரிடம் வழங்கப்பட்டுள்ளது. துறை அலுவலர்கள் தொகையினை பெற்று மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களிடம் ஒப்படைத்து, தேர்வுப் பணியில் ஈடுபட்ட அனைத்து பணியாளர்களுக்கும் தொகை வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
- மேலும் தேர்வுப் பணியில் ஈடுபட்ட பறக்கும் படை உறுப்பினர்கள் உரிய வருகைச் சான்றுடன், உரிய தொகையினை 13.04.2013 அல்லது 15.04.2013 அன்று மாலை 05.00 மணிக்குள் விழுப்புரம், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நேரில் பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/– த. செங்குட்டுவன்,
மாவட்டக் கல்வி அலுவலர்,
விழுப்புரம்.

பெறுநர்

சம்பந்தப்பட்ட தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் / துறை அலுவலர்கள்.

நகல்: விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: கடலூர்–1, அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.